# தமிழீழ அரசியல்துறை
## POLITICAL WING OF TAMILEELAM

https://thamileelaarasiyalthurai.info
tat.info.international@gmail.com
+(44) 0734 983 8393


TAT20260401-13T

நிர்வாகம்
தமிழீழ அரசியல் துறை
அனைத்து நாடுகள்
01-04-2026

## மாவீரர்களின் திருவுருவப் படங்கள், தமிழீழத் தேசிய சின்னங்கள் மற்றும் போராட்ட வரலாறுகளை, களங்கப்படுத்துபவர்களுக்கான கண்டன அறிக்கை!

எமது அன்பிற்கும் மதிப்பிற்குரிய தமிழீழ மக்களே !

சிங்கள பேரினவாதம் எமது மக்கள் மீதும் மண்மீதும் கட்டவிழ்த்து விட்ட அடக்குமுறைகளுக்கு எதிராக தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் தலைமையில் உலகமே வியந்து பார்க்கும் வகையில் மாபெரும் வீரத்தோடும் அதி உன்னதமான தியாகங்களைப் புரிந்தும் நடை பெற்ற தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்ட பின்னரும் தமிழீழ விடுதலைப் போரில் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த மாவீரர்களையும், தமிழீழத் தேசிய சின்னங்கள், அடையாளங்கள் மற்றும் போராட்ட வரலாறுகளையும் பேணிப் பாதுகாத்து, அவர்களிற்கான அதி உயர் மரியாதையையும் வணக்கத்தையும் தமிழ் மக்கள் செலுத்தி வருகின்றனர்.

ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் அண்மைக் காலமாக அதி உன்னதமான தங்களின் உயிர்களை, தியாகம் செய்து தாங்கள் நேசித்த மக்களுக்காகவும், மண்ணுக்காகவும் வீர வரலாறாகிப் போன மாவீரர்களின் திருவுருவப் படங்களை நிலத்தில் போடுவதும் தமிழீழ நிழல்அரசு இயங்கிய காலத்தில் எமது தமிழீழத் தேசிய சின்னங்களாக அறிவிக்கப்பட்டதில் பிரதானமாக தமிழீழத் தேசியக்கொடி, தமிழீழத் தேசிய மலர், (புலி,செண்பகம்,கார்த்திகைப்பூ,வாகை) போன்றவற்றை ஆர்வமிகுதியாலும், அவமதிக்கும் வகையில், சிலர் பயன் படுத்துவதை காணமுடிகின்றது.

தமிழீழ மக்களின் தேசிய எழுச்சி நாட்கள், வலிசுமந்த உணர்வு பூர்வமான நாட்களான மாவீரர்நாள், முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நாள், தியாக தீபம் திலீபன், மற்றும் அன்னை பூபதி அவர்களின் நினைவு நாட்கள் ஆகியவை நடைபெறுகின்ற மாதங்களில் தமிழ்த் தேசியத்தின் பெயரால் வியாபார நோக்கில், நடைபெறும் கலை நிகழ்வுகளையும், களியாட்டப் போட்டிகளையும் நடாத்துவதும், நடாத்த முனைவதும் மிகுந்த மன வேதனையும், விசனத்தையும், அதிருப்தியையும் அளிக்கின்றது.

தமிழின வரலாற்றில் அக, புற நானூற்றுக் காலத்திற்குப் பின்னர் மீண்டும் தமிழ் இனத்தின் வீரத்தையும் மானத்தையும் நிலைநாட்டி பேரேழுச்சியுடன் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றை போராட்டத்தில் நேரடியாக பங்காற்றியோ அன்றி போராட்டத்துடன் எந்தவித தொடர்பும் இல்லாமல் இருந்து வந்த பலரும், தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றை, திரைப்படங்கள், பாடல்கள், புத்தகங்கள், சமுகவலைத்தள நிகழ்வுகள்,கலை நிகழ்வுகள் ஆகியவற்றின் வாயிலாக உண்மைக்கு புறம்பாக தங்களின் கற்பனையில் இருந்து வெளிவரும் ஊகங்களின் அடிப்படையில் வெளியிடுவதும், இவர்கள் வீர விடுதலைப் போராட்டத்தை மடைமாற்றி தவறான கருத்துக்களை தொடர்ந்தும் பரப்பி வருகின்றனர். மேலும் புலம் பெயர் தேசங்களில் காலம் காலமாக இருந்து வரும் தமிழ்க் கல்விச் சேவைகளில் மாற்றத்தை கொண்டு வருகின்றோம் என்ற போர்வையில் எமது வருங்கால சந்ததியினருக்கு தமிழர்களின் போராட்ட வரலாறுகள் சென்றடையா வண்ணம், அவற்றை நன்கு திட்டமிட்டு, மிக நுண்ணிய முறையில் அகற்றுவதும், அதில் மாற்றம் செய்வதையும் அவதானிக்க முடிகின்றது.

“வரலாறு எமது வழிகாட்டி” என்ற தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனைக்கு எதிராக, இளைய தலைமுறையினருக்கு உண்மை வரலாறு சென்றடையாவண்ணம் தடுத்து, வரும் காலத்தில் அடுத்த தமிழீழத் தலைமுறைகளையும் அடிமைகளாக வைத்திருப்பதே இவர்களின் பிரதான நோக்கமாகும்.

உலகமெல்லாம் பரந்து வாழும் எம் இனியதமிழ் பேசும் மக்களே!
இவ்வாறான தமிழ்த் தேசிய இன விரோத சக்திகளை இனம் கண்டு அவர்களுக்கு எந்த விதமான ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்காமல், அவர்களை தமிழ் தேசிய பரப்பில் இருந்து விலக்கி வைக்க வேண்டும் என்று உங்களை உரிமையோடு கேட்டுக்கொள்வதோடு, உலக நாடுகளின் துணையோடு, சர்வதேச போர் விதிகளை மீறி எமது ஆயுத போராட்டத்தை அழித்த சிங்கள அரசும், அதன் புலனாய்வு




தமிழீழ அரசியல்துறை – அனைத்து நாடுகள்

தமிழீழ அரசியல்துறை - ஐக்கிய இராச்சியம் | தமிழீழ அரசியல்துறை - கனடா | தமிழீழ அரசியல்துறை - சுவிச்சர்லாந்து | தமிழீழ அரசியல்துறை - பிரான்சு
தமிழீழ அரசியல்துறை - அவுஸ்திரேலியா | தமிழீழ அரசியல்துறை - யேர்மனி | தமிழீழ அரசியல்துறை - நியூசிலாந்து | தமிழீழ அரசியல்துறை - அமெரிக்கா
தமிழீழ அரசியல்துறை - ஸ்கொட்லாந்து | தமிழீழ அரசியல்துறை - நோர்வே | தமிழீழ அரசியல்துறை - டென்மார்க் | தமிழீழ அரசியல்துறை - பின்லாந்து

TAT20260401-13T

அமைப்புக்களும், இன்று தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றை அழிக்க முயற்சிப்பதோடு, அதன் உண்மை மற்றும் நியாயாதிக்கத்தை இல்லாமல் செய்வதே இவர்களின் பிரதான நோக்கம் ஆகும். இது போன்ற தமிழின விரோத செயல்களில் ஈடுபடுபவர்களை தமிழீழ அரசியல்துறையினராகிய நாம் மிக வன்மையாகக் கண்டிப்பதோடு, இவ்வாறான செயல்களில் தொடர்ந்தும் ஈடுபட வேண்டாம் என்று உரிமையோடு கேட்டுக்கொள்கின்றோம்.

**“தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்”**

திரு. கி. நல்லையா
நிர்வாகப் பொறுப்பாளர்
தமிழீழ அரசியல்துறை
அனைத்து நாடுகள்.

திரு. இ. இளங்கீரன்
பொறுப்பாளர்
தமிழீழ அரசியல்துறை
அனைத்து நாடுகள்.